# ஸ்ரீமதழகியசிங்கரின் அருள்மொழிகள்

## பெரிய திருமொழி - 14



''கோடிய மனத்தால்'' स्वादोफलस्य (வேதம்). இந்த பாசுரத்தால் யமலோகத்திலுள்ள வாதனைகளைப் பற்றி சொல்கிறார். அதை போக்க உன்னை வந்து அடைந்தேன் என்கிறார். இதற்கு முன் காம மோஹாதிகளாலும் ஆசையின் ஆதிக்கத்தாலும் செய்யக்கூடாததை செய்து ஆசைப்பட்ட பொருளை சம்பாதித்து பர பெண்களை எப்படியாவது அனுபவிக்கவேண்டுமென்று முயன்று (அதை தடுத்த) அதற்கு விரோதிகளாக யார் யார் இருக்கிறார்களோ என்று நினைத்தேனோ அவர்களை எல்லாம் அடித்து நொறுக்கி அனர்த்தங்களுக்கு அவர்களை ஆளாக்கி அதுவும் போறாமல் அவர்கள் உள்ள இடங்களைத் தேடித் தேடி அளவுக்கு மீறி ப்ரயாசைப்பட்டு கொலை செய்துள்ளேன். மேலும் வேட்டையாட விரும்பி பலருடன் கூடிக் கொண்டு பல மிருகங்களை வேட்டை நாய்களை முன்னே துரத்தி திரிந்து மிகவும் சந்தோஷமாக கண்ணில் பட்ட மிருகங்களையெல்லாம் கொலை செய்தும் திருந்தாமல் மேன்மேலும் இவைகளை செய்து இந்த பாப விசேஷங்களால் ஏற்பட்ட இப்போதிருக்கும் வாதனைகள் போதாதென்று யமலோகத்தில் எனக்காக இருப்பதற்கும் மேலான கொடுமைகள் பார்த்து முன்பு உள்ளதே பொறுக்க முடியாமல் இருக்கும்போது இன்னும் மேலான துக்கங்கள் அமையுமோ என்று அஞ்சி யமனையும் நிர்வஹிக்க கூடியவனாய் அவன் போன்றவர்களுக்கு தேவாம்ருதம் அளித்து உதவியவன் நீ தான் (வேறு யாராலும் முடியாது) என்று நன்கு ஆராய்ந்து உன் திருவடியை வந்து அடைந்தேன் என்கிறார்.

(வேதப் பொருள்) கர்மபலன்களை அனுபவித்தே ஆகவேண்டும் என்று ஶாஸ்த்ரம் சொல்கிறது. நீ இஹத்தில் இருக்கக்கூடிய போகாதிகள் நித்யம் என்று அனுபவித்து அதனால் ஏற்பட்ட பாபங்களின் பலன்களை அனுபவித்தே ஆகவேண்டும். அதற்கும் பல ஜன்மாக்கள் எடுக்கவேண்டும். இது தொடர்ந்து கொண்டே இருக்கும். இதிலிருந்து விடுபட வேண்டுமானால் மிகவும் தெவிட்டாத அமுதமாகிற எம்பெருமான் திருவடிகளை அடைவதே வழி. எப்படி ஒரு பசுவானது வைக்கோல் முதலியவைகளை சாப்பிட்டு மிகவும் நல்ல பொருளா, பால், தயிர், வெண்ணை, நெய் எல்லாவற்றையும் கொடுக்கிறதோ அதேபோல் நைமிசாரண்ய ரூபமான எம்பெருமான் திருவடிகளை அடைந்தால் அந்த திருவடியானது உனது ஸகலபாபங்களையும் போக்கி தெவிட்டாத அமுதமாகிய தன் திருவடியை தந்தருள்கிறான் என்பது பொருள். ❋